Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 19, 2024

செவ்வாய்க்கிழமை மார்ச் 19, 2024 | ஒளி: 09 கதிர்: 215 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# சூரியன் உச்சம் கொடுக்கும்

நிலவும் வெப்பமான வானிலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் நாட்டின் சில பகுதிகளில் மாலை வேளையில் மழை பெய்யக்கூடும் என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டார்.

ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை சூரியன் உச்சம் கொடுப்பதால், வெப்பநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அதுல கருணாநாயக்க கூறினார்.

தொடர்ச்சி P12

# ‘3ஆம் உலகப் போர் மூளும்’



**ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் வெற்றி உரையில் புட்டின் எச்சரிக்கை**

“அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் – ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதினால் மூன்றாம் உலகப் போர் மூளும். ஆனால், அத்தகையச் சூழலை இங்கு யாரும் விரும்பவில்லை” என்று மீண்டும் ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ள விளாடிமிர் புட்டின் தனது வெற்றி உரையில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்நிலையில், ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை (15) தொடங்கியது. இத்தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி புட்டின், சுயேச்சையாகப் போட்டியிடும் சூழலில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர ஜனநாயக கட்சி, புதிய மக்கள் கட்சி ஆகியவை களம் கண்டன. முதன்முறையாக ரஷ்ய வரலாற்றில் மூன்று நாட்கள் வாக்குப்பதிவு நடந்தது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ரஷ்ய வரலாற்றில் ஸ்டாலினுக்குப் பிறகு தொடர்ச்சியாக 3வது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றி என்ற சாதனையை புட்டின் படைத்துள்ளார். 200 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு சாதனையை புட்டின் செய்துள்ளார்.

தொடர்ச்சி P12



## சந்திப்பு

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஐக்கிய இராச்சியத்தின் சட்டமா அதிபர் திருமதி விக்டோரியா ப்ரெண்டிஸை சந்தித்தார்.

# “சூத்திரமே இங்கு ஆடுகின்றது”



**113 எம்.பிக்களின் கையொப்பம் ராஜபக்ஷக்களின் தேவை என்கிறார் திஸ்ஸ**

யாருடைய தேவையையும் நிறைவேற்ற நாம் தயார் இல்லை. பாராளுமன்றத்தை கலைக்க 113 பேர் கையொப்பமிட்டு எழுத்து மூலம் கோர வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகிறார். இது அவர் ஜனநாயகவாதி என்ற தோற்றப்பாட்டை காண்பிக்க எடுக்கும் முயற்சியாகும் என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, உண்மை இதுவல்ல. பசில் ராஜபக்ஷவின் தேவையையே ஜனாதிபதி நிறைவேற்ற முயற்சிக்கிறார் என்றார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், திங்கட்கிழமை (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பசில் ராஜபக்ஷவின் சூத்திரமே இங்கு ஆடுகின்றது. மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற ஆதரவு இருந்தால் மட்டுமே ஜனாதிபதிக்கும் எஞ்சிய ஐந்து ஆறு மாதங்களுக்கு பதவி வகிக்கலாம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்லை நடத்தினால் மாத்திரமே மொட்டுக்கு கொஞ்சமேனும் பாராளுமன்ற உறுப்பினர்களை எடுத்துக் கொள்ளலாம் என பசில் சிந்திக்கிறார்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்

தொடர்ச்சி P12

# “எதிர்பார்ப்பது ரூ.2,000 ரூ.1,700 கிடைத்தால் ஏற்போம்”

செ.தி.பெருமாள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1,700 ரூபாயை நாள் சம்பளமாகப் பெற்றுத் தருவதாகக் கூறியுள்ளது. அதனை நாங்கள் முழுமையாக எற்றுக் கொள்கின்றோம்.அதற்கு எங்களுடைய முழுமையான ஒத்துழைப்பு உண்டு.

நாம் எதிர்பார்ப்பது 2,000 ரூபாயாகும். ஆனால் 1,700 ரூபாய் கிடைக்குமாக இருந்தால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

### வடமாகாணத்தில்

# வெளிநாட்டு மோகத்தால் 254 கோடி ரூபாய் மோசடி

எம்.றொசாந்த்



வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி வடமாகாணத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு 254 கோடி ரூபாய் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் 139 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் காங்கேசன்துறை பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதியில் 51 கோடி ரூபாய் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் 44 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P12



### கனடாவில் கொலை செய்யப்பட்ட

# இலங்கையர்களின் இறுதிக் கிரியைகள்

கனடாவின் ஒட்டாவாவில் வெட்டிக் கொல்லப்பட்ட இலங்கையர்களின் இறுதிக் கிரியைகள், திங்கட்கிழமை (18) நடைபெற்றுள்ளன.

சுமார் இருநூறு பேர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். கனடிய பௌத்த காங்கிரஸ் என்னும் பௌத்த அமைப்பு இறுதிக் கிரியை நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. இன்பினிட்டி கன்வென்சன் நிலையத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவத்தில் நான்கு சிறுவர்கள் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் மற்றுமொரு நபரும் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சி P12

### தானிய கொள்வனவில்

# அவதானமாக இருங்கள்

பண்டிகைக் காலங்களில் தானிய வகைகளை கொள்வனவு செய்வதில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கூறுகையில், பூச்சிகளால் தானியங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில், சட்டவிரோத வியாபாரிகள் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற இரசாயனங்களை சேர்க்கின்றனர்.

தொடர்ச்சி P12



# ‘அக்கல’ உட்கொண்ட மூவருக்கு ஆபத்து

உலர் அரிசியில் தயாரிக்கப்பட்ட ‘அக்கல’யை உட்கொண்ட மூவர் ஆபத்தான நிலையில் மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீகஹகிவுல–கனுகொல்ல கிராமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். கோமரிக்க கனுகொல்ல கிராமத்தில் வசிக்கும் 14, 34 மற்றும் 28 வயதுடைய மூவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலர்ந்த அரிசி, தேங்காய், சீனி போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அக்கலவை, ஞாயிற்றுக்கிழமை (17) மாலையில் உட்கொண்டு தேநீர் அருந்தியுள்ளனர். அதன்பின்னர் அதிக வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### யாழ்.பட்டிமன்ற விவகாரம்

# யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் விசாரணை

எம். றொசாந்த்

இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் முகமாக, தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ள வைக்கும் வகையில் பட்டிமன்றில் கருத்து தெரிவித்தமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழகத்திடம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற “தமிழ் வேள்வி - 2023” என்ற நிகழ்வில் , “ஈழத் தமிழ் சமுதாயத்தில் தற்போது இளைஞர் அமைப்புக்களின் எழுச்சி , அவசியமானதா ? அவசியமற்றதா?” எனும் தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்தில் நடுவராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் அதிபர் ச.லலீசன் கலந்து கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P12

# “உயர் நீதிமன்ற உத்தரவை எட்டி உதைக்கிறது”




தற்போதைய அரசாங்கம் உயர் நீதிமன்ற உத்தரவை எட்டி உதைத்து சட்டத்தின் ஆட்சியை அழிப்பதற்கான கதவுகளைத் திறந்து விடுவதாகவும், அடிப்படை உரிமைகளுடன் பாராளுமன்றச் சட்டம் முரண்படும் போது தலையிடுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு முக்கிய பங்கு இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திங்கட்கிழமை (18) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘3ஆம் உலகப் போர் மூளும்’



200 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு சாதனையை புட்டின் செய்துள்ளார்.

தேர்தலில் மெகா வெற்றியைப் பெற்றிருக்கும் புட்டின் ஆற்றிய முதல் உரையில், “அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் – ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதிக் கொள்வது என்பது இந்த உலகம் மூன்றாம் உலகப் போரை எதிர்கொள்வதற்கு வெகு அருகில் நிற்கிறது என்று அர்த்தம். அத்தகைய சூழலை எவருமே விரும்பமாட்டார்கள். ஆனால், இந்த நவீன உலகத்தில் எதுவும் சாத்தியமே.

ஆனால் உக்ரேனில் நேட்டோ படைகள் உள்ளன. அவற்றில் ஏற்கெனவே ஆங்கிலம் பேசும் வீரர்களும், பிரெஞ்சு பேசும் வீரர்களும் உள்ளனர். அவர்கள் அங்கே கொத்து கொத்தாக மடிந்து கொண்டிருக்கின்றனர். சம்பந்தப்பட்ட நாடுகள் தங்கள் வீரர்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நலம்.

சிறையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸ் நவல்னியை நான் விடுதலை செய்யவே விரும்பினேன். ஆனால் அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். மேற்கத்திய நாடுகளின் சில சிறைகளில் இருக்கும் ரஷ்யக் கைதிகளுக்கு மாற்றாக நவல்னியை விடுவிக்க ஒப்புக் கொண்டிருந்தேன். அவரது மறைவு எதிர்பாராதது.

ஆனால், அதைச் சிலர் விமர்சிக்கின்றனர். அமெரிக்கச் சிறைகளில் இதுபோன்ற இறப்புகள் நேர்ந்ததே இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நேர்ந்திருக்கின்றன. அமெரிக்காவில் ஜனநாயகம் இல்லை. அங்கே இப்போது மிகப்பெரிய குளறுபடியான சூழல் மட்டுமே நிகழ்கிறது. நிலவரம் அப்படியிருக்க அவர்கள் ரஷ்யத் தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்று போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நகைப்புக்குரியது. இவ்வாறு புட்டின் பேசினார்.

ரஷ்யா தேர்தலில் பதிவான வாக்குகளில் 70 சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்டுவிட்ட நிலையில் அவற்றில் 87.17 சதவீத வாக்குகளை ஜனாதிபதி புட்டின் பெற்றுள்ளார்.

# சூரியன் உச்சம் கொடுக்கும்

இதேவேளை, சித்திரை புத்தாண்டிற்குப் பின்னர் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்யுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக அவ்வாறான போட்டி நிகழ்ச்சிகளை சில வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த ஆலோசனைகளை சில பாடசாலைகள் மீறுவதை ஊடகங்கள் வழியாகத் தாம் அறிவதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# “எதிர்பார்ப்பது ரூ.2,000 ரூ.1,700 கிடைத்தால் ஏற்போம்”

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவான மலையக மகளிர் முன்னணி, சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய மகளிர் தின நிகழ்வை இராகலை ஜெமினி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) நடத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், மலையக மக்கள் முன்னணி அண்மைக்காலமாக ஏற்பாடு செய்துவருகின்ற எல்லா நிகழ்வுகளிலும் மக்கள் ஆதரவு அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதற்குக் காரணம் மலையக மக்கள் முன்னணி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கட்சி ரீதியாக இன ரீதியாகச் செயற்பட்டதில்லை. நாம் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றமை அதற்கு முக்கிய காரணமாகும்.

எதிர்வரும் காலத்தில் சமாதான நீதவான்களாகப் பெண்களை நியமனம் செய்வதற்கு மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஏனெனில், அவர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு கௌரவமாக நாம் கருதுகின்றோம்.

அத்துடன், தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதனை எல்லாம் இன்று செய்து கொண்டு மக்களை குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். தேர்தலை நடத்தி மக்களுக்கான வாய்ப்பை கொடுத்து ஜனநாயக அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகத்தான் இருக்கின்றது. எனவே, மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

# “சூத்திரமே இங்கு ஆடுகின்றது”

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசியல் ரீதியானது அன்றி அரசியலமைப்பு மீறல் சார்ந்ததாகும் என்று தெரிவித்த சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிகொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அத்துடன், தேர்தல்கள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மொட்டுக் கட்சியால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதால் அவர்களின் இருப்பை கொஞ்சமேனும் பாதுகாத்துக் கொள்ளவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலைக் கோருகின்றனர் என்று தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தி எந்த தேர்தலுக்கும் தயார்.

வெற்றி பெற்றதன் பின்னர் காலம் தாழ்த்தப்பட்ட மாகாண சபை மற்றும் பிரதேச சபைத் தேர்தல்களை உடனே துரிதமாக நடத்துவோம். மாகாண சபை தேர்தல் விடயத்தில் ஆறு வருடங்களாக அரசியலமைப்பை மீறியுள்ளனர்.

மூன்றாம் கட்ட தவணையை வழங்கும் நோக்கில் மீளாய்வுக் கலந்துரையாடலுக்காகச் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் இலங்க வருகை தந்துள்ளனர். சர்வதேச கடன் பெறுநர்களுடனான உடன்பாடு இன்னும் சரியான நிலைப்பாட்டு வரவில்லை. இது இன்னும் நாட்டின் கடன் சுமையை அதிகரித்துள்ளது. தனிநபர் கடன் விகிதம் அதிகரித்துள்ளது. வருமானத்திற்கும் செலவீனத்திற்கும் இடையிலான முகாமைத்துவத்தில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்றார்.

அத்துடன், அரச சொத்துக்களை விற்பனை செய்வது அல்லது அரச நிறுவனங்களை மறுசீரமைப்பிற்கு உட்படுத்துவது தொடர்பாகத் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு தொடர்பாக இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்திய விஜயத்திற்குப் பின் டென்டனர் முறைமையில் அரச சொத்துக்களை விற்பனை செய்வதில் பிரச்சினை இல்லை என்று தற்போது கூறுகின்றனர். நேரடியாக தமது நிலைப்பாட்டை முன்வைக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கிறோம் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு மோகத்தால் 254 கோடி ரூபாய் மோசடி

மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 46 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 17 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் சந்தேக நபர்கள் 08 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 116 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் சந்தேக நபர்கள் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 33 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் சந்தேக நபர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 5 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் சந்தேக நபர்கள் 04 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

**“ வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைப்பதாகக் கூறி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் விழிப்படையும் போதே, இவ்வாறான மோசடியான நபர்களிடம் இருந்து தமது பணத்தினை பாதுகாத்துக்கொள்ள முடியும்**

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைப்பதாகக் கூறி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் விழிப்படையும் போதே, இவ்வாறான மோசடியான நபர்களிடம் இருந்து தமது பணத்தினை பாதுகாத்துக்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இலங்கையர்களின் இறுதிக்....

19 வயதான இலங்கை இளைஞர் ஒருவர் இந்த படுகொலைகளை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளில் கனேடிய அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

கெரி ஆனந்த சங்கரி உள்ளிட்டவர்கள் இந்த இறுதிக் கிரியைகளில் இரங்கல் உரைகளை நிகழ்த்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

றொறன்ரோ மற்றும் ஒட்டாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் இந்த இறுதிக் கிரியை நிகழ்வுகளை வழிநடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தானிய கொள்வனவில் அவதானமாக இருங்கள்

சந்தையில் காணப்படும் சந்தேகத்திற்கிடமான தானியங்கள் அரசாங்கத்தின் ருசி பரிசோதகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் உள்ள நச்சு இரசாயனங்களை அடையாளம் காணும் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நச்சு இரசாயனங்கள் கலந்து விற்கப்படும் தானியங்கள் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும் என்றும், அதே நேரத்தில் சந்தையில் இருந்து தகுதியற்ற உணவுகளை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.



# பேக்கரி பொருட்களின் விற்பனை சரிவு

பேக்கரி பொருட்களுக்குப் பயன்படுத்தப்படும் சேர்மானங்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளதால், பாண் போன்ற பேக்கரி பொருட்களின் விற்பனை குறைந்துள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவுக்கு ரூ. 50 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது, முட்டையின் விலை அதிகரித்துள்ளதுடன், ஒரு கிலோ வெண்ணெய்க்கு ரூ.6,000 வரி விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, பேக்கரி பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், பாண் விற்பனை 40 சதவீதத்தால் குறைந்துள்ளது, மற்ற பேக்கரி பொருட்களின் விற்பனை 25 சதவீதத்தால் குறைந்துள்ளது. மேலும், பாண் தவிர பேக்கரி பொருட்களுக்கு 18 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 10 வீதமான பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாகவும், மின் கட்டணம் 21.9 வீதத்தால் குறைக்கப்பட்ட போதிலும், பேக்கரி உரிமையாளர்கள் பேக்கரி பொருட்களின் விலையைக் குறைக்கவில்லை எனவும் விதானகே தெரிவித்துள்ளார்.

# “உயர் நீதிமன்ற உத்தரவை எட்டி உதைக்கிறது”

சபாநாயகர் கட்சி சார்பற்றவராக இருக்க வேண்டும் என்றாலும், தற்போதைய சபாநாயகர் பக்கச்சார்பான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதாக தெரிவித்த பீரிஸ், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எந்தவொரு சட்டமூலமும் மனித உரிமைகளுக்கு முரண்பட்டால், அந்த மசோதாக்களுக்கான திருத்தங்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், அரசால் பொதுத் தேவைகளை நிறைவேற்ற முடியாதபோது, பொது மக்களுக்கு எதிராக நிற்க உரிமை உண்டு அது அரசியலமைப்பிலேயே உள்ளது என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட மசோதாவுக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பித்து மூன்று வாரங்களுக்குள் சபாநாயகருக்கு உயர் நீதிமன்றம் அறிவித்த பிறகு, உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் மற்றும் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்றும் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலம் ஜனநாயகத்தை அப்பட்டமாக அழித்து விட்டது என்றும் அவர் கூறினார்.

# வறட்சியால் 18 நீர் ஆதாரங்களுக்கு ஆபத்து

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நாட்டில் 18 நீர் ஆதாரங்கள் ஆபத்தான நிலையிலுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் 18 நீர் ஆதாரங்கள் ஆபத்தான நிலையில் உள்ளதால் எதிர்காலத்தில்



அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு நீரை பயன்படுத்த வேண்டாம்.

லபுகம, கலடுவாவ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் இன்னும் இரண்டு மாதங்களுக்குப் போதுமானது.

கண்காணிப்பு அமைப்பின் கீழ் 16 நீர் விநியோக அமைப்புகளில் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பேருவளை, அளுத்கம, நிவித்திகல, நாரம்மல, கம்போலவத்தை, புஸ்ஸல்லாவ, அங்கும்புர, மீவதுர, புஸ்ஸெல்ல, ரத்தோட்டை, ஹட்டன், கொட்டகலை, ஊருபொக்க, புத்தல, சூரியஹார ஆகிய பகுதிகளுக்கு இவ்வாறு நீர் விநியோகம் செய்யப்படுகிறது.

இதேவேளை, வாத்துவை, எஹெலியகொட மற்றும் ரதம்பல பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் தற்போது குறைந்த அழுத்தத்தில் விநியோகிக்கப்படுவதால், அந்த பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் விசாரணை

இதன்போது, தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ளத்தூண்டும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்ததாகவும், இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையிலான கருத்துக்களைத் தெரிவித்ததாகக் கல்வி அமைச்சுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் கல்வி அமைச்சின் ஒழுக்காற்று பிரிவுக்கான மேலதிக செயலர், சீ.சமந்தி வீரசிங்க, கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சி கல்வி பிரிவின் பணிப்பாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, தனக்கு விளக்கமான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என பணித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பட்டிமன்றம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது? உள்ளிட்டவை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் விசாரணைகளை முன்னெடுக்கிடுமாறும் கல்வி அமைச்சு , பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குப் பணித்துள்ளது.

# கொழுந்து பறிக்கும் பெண்ணொருவரை எம்.பியாக்குவோம்




எதிர்வரும் பொதுத் தேர்தலில் பெருந்தோட்ட பெண்களின் அதிகாரத்தைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறிக்கும் பெண்ணொருவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பவுள்ளதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை இந்து கலாசார நிலைய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) காலை 10.00 நடைபெற்ற இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு பண்டாரவளை புகையிரத நிலையத்திலிருந்து நகரின் ஊடாக பண்டாரவைளை இந்து கலாச்சார மண்டபம் வரை பேரணியாகச் சென்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டதனை அடுத்துத் தெரிவு செய்யப்பட்ட பதுளை மாவட்ட பெண்களுக்குக் கௌரவிப்பு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, வடிவேல் சுரேஷ் உரையாற்றுகையில்,

"பதுளை மாவட்டத்தின் சுற்றுலாப் பிரதேசத்தில் தோட்டக் காணிகளைக் கையகப்படுத்தியதன் காரணமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் காணிகளில் உரிமை வழங்கப்பட வேண்டும்,

தற்போதைய காலகட்டத்தின் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் இன்னும் அதிகரிக்கப்படவில்லை. இருப்பினும் இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் 1,700 போதாது 2,000 ரூபாய் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

மேலும், இன்றைய பிரகடனமாக மூன்று விடயங்களையும் மேலும் முன்வைத்துள்ளார்.

2,000 ரூபா தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட வேண்டும், காணி உரிமையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும், முதலாளி மார் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் பதிவு செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# லேகிய பாக்கெட்டுகளுடன் ஒருவர் கைது





ரீ.எல்.ஜவ்பர்கான்

'யுக்திய' போதையொழிப்பு திட்டத்தின் கீழ், காத்தான்குடி பொலிஸாரால் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது, சுமார் 735 மதன் மோதக காம லேகிய பாக்கெட்டுகளுடன் 35 வயதுடைய நபரொருவர் டெலிகொம் வீதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினருக்கு ஞாயிற்றுக்கிழமை (17) கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய, நபரொருவர் வாகன மொன்றில் போதை லேகியம் எடுத்து செல்லப்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனரர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து சுமார் 735 லேகிய பாக்கெட்டுகள் மற்றும் வாகனமொன்றும் மீட்கப்பட்டுள்ளதுடன், அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை கடந்த இரு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஐஸ் மற்றும் ஹெரோயின், கேரளா கஞ்சாவுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் போன மீனவர் சடலமாக மீட்பு

நிதர்ஷன் வினோத்

யாழ். மருதங்கேணி கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது காணாமல்போன மீனவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (17) மாலை கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணியைச் சேர்ந்த 61 வயதுடைய முத்துச்சாமி தவராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சனிக்கிழமை (16) அதிகாலை 4.00 மணியளவில் தெப்பத்தில் சென்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது, இனந்தெரியாத படகு ஒன்று தெப்பத்தை மோதியுள்ளதுடன், இதில் தெப்பம் கரையொதுங்கியுள்ள நிலையில், மீனவர் காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன மீனவரை தேடும் பணியில் அப்பகுதி மக்களும் கடற்படை சுழியோடிகளும் ஈடுபட்டிருந்த நிலையிலேயே சடலம் இவ்வாறு மருதங்கேணி கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ஜெமில் பார்வையிட்டுள்ளதுடன், தடயவியல் பொலிஸாரால் தடயங்கள் பெறப்பட்ட பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கிணற்றில் தவறி விழுந்து யுவதி மரணம்



க.அகரன்

வவுனியா - சமனங்குளம் பகுதியில் அமைந்துள்ள தோட்ட கிணறு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (17) தவறி விழுந்து யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா- சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று மாலை குறித்த யுவதி, கிணற்று மோட்டரை இயக்கிய நிலையில், அதன் குழாய் கழன்றமையால் அதனைப் பூட்ட முயன்றபோது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது குறித்த யுவதி கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்ததையடுத்து, அயலவர்களின் உதவியுடன் யுவதியை மீட்டு, வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# வீதி விபத்தில் குடும்பஸ்தர் பலி




ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கரம்பை பகுதியில் சனிக்கிழமை இரவு (16) இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலாவி - கரம்பையைச் சேர்ந்த முத்து தம்பி இராமநாதன் (வயது 42) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் இரவு நேரத்திற்கான உணவை எடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் கரம்பை உள்வீதியில் இருந்து பிரதான வீதிக்கு சென்றபோது பாலாவியிலிருந்து நுரைச்சோலை நோக்கிப் பயணம் செய்த லொறியொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர் .

அவரை மீட்டு புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ள போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது .

புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம் உயிரிழந்த நபரின் சடலம் மீதான மரண விசாரணையை நடத்தியுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "தேர்தல்களில் தகுந்த தீர்மானத்தை எடுப்பேன்"

செ.தி.பெருமாள்

"எந்தத் தேர்தல் வந்தாலும் மக்கள் நலன் கருதி உரிய நேரத்தில் தகுந்த தீர்மானத்தை எடுப்பேன்" என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின விழாவை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (17) ஹட்டன் அஜந்தா விருந்தகத்தில் இடம்பெற்ற சங்கத்தின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "எதிரணியில் இருந்தாலும் எனக்கு 85,000க்கும் மேலான வாக்குகளை அளித்த மக்களுக்கும், என் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்கும் சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

தொழிலாளர்களுக்கு 30 நாட்களுக்கும் 1,700 ரூபாய் சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சியடைவேன். அதேநேரம் ஊழியர் சேமலாப நிதியோடு ஒரு கிலோ கொழுந்துக்கு 100 ரூபாய் வீதம் கிடைத்தால் அதையும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

அரசியல் ரீதியில் யாரையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. பழைய பாணியில் மக்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்தி, பழிவாங்கும் அரசியல் செய்யும் நோக்கமும் கிடையாது. எனது வயதுக்கும் அனுபவ முதிர்ச்சிக்கும் ஏற்ப, கடந்த கால சேவைகளையும், இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு முதலான எதிர்கால வேலைத் திட்டங்களையும் முன்வைத்து சரியான அரசியல் தெளிவை ஏற்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவேன்.

தொழிலாளர் தேசிய சங்கம் வாரிசு அரசியலை மேற்கொள்ளாது. ஜனநாயக ரீதியில் கட்சியைப் பொறுப்பேற்க யாராவது முன்வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றேன்." என குறிப்பிட்டுள்ளார்.

நிதிச் செயலளார் சோ.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், பொதுச் செயலாளர் எஸ். பிலிப், நிர்வாகச் செயலாளர் டாக்டர் ஏ.நந்தகுமார், தேசிய அமைப்பாளர் ஜி.நகுலேஸ்வரன், உபதலைவர்கள், உபசெயலாளர்கள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள், தலைவிகள், இளைஞர் அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.



# இராதாகிருஸ்ணனன் தலை பதித்த தபால் முத்திரை




நிலமேகம் பிரசாந்த்

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.ராதாகிருஸ்ணன் தலை பதித்த தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவான மலையக மகளிர் முன்னணி, சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய மகளிர் தின நிகழ்வை இராகலை ஜெமினி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) நடத்தியது.இதன்போதே முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

# கழுத்தறுக்கப்பட்டு பெண் கொலை

மொரட்டுவை பிரதேசத்தில் 50 வயதுடைய பெண் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மொரட்டுமுல்ல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் கணவர், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த கணவரின் உறவினர் ஒருவரால் இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.




# கண் பார்வை தொடர்பான வழிகாட்டுதல்கள் கடுமையாக்கவும்

ஓட்டுநருக்கு வாகனம் ஓட்டும்போது இருக்க வேண்டிய அறிவும், பொறுப்பும், பொறுமையும் அந்த ஓட்டுநரிடம் இல்லாததால் தான். வீதி விபத்துக்களின் போது பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையில் பார்வை தரம் குறைவடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வரும் பின்னணியில் விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள முறையின்படி, ஒரு கண்ணில் பூஜ்ஜிய தூரம் பார்வை இல்லாதவர்களுக்கு இலகுவாக வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குவதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில், புதிய வழிகாட்டுதல்களில் இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புகள் அதிகம் நடக்கும் பருவத்தில், ஓட்டுநர் உரிமம் வழங்குவதில், உரிமம் வைத்திருப்பவரின் உடல்நிலை, குறிப்பாகக் கண் பார்வை தொடர்பான வழிகாட்டுதல்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்பது, கடுமையான பிரச்சினையாக உள்ளது.

இது தொடர்பாக, முடிவெடுப்போர் அதற்கான தகுதியும், தொழில் அனுபவமும் உள்ள நிபுணர்களிடம் ஆலோசனை பெறுகிறார்களா என்று கேட்க வேண்டும். ஏனெனில், இதுபோன்ற நிபுணர்களின் கவனம் கண்டிப்பாகப் பார்வைக் குறைபாடுள்ள ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள் மீதுதான் இருக்கும்.

எமக்குக் கிடைத்த தகவலின்படி, கிட்டப் பார்வை உள்ளவர்களுக்கு இலகுவாக வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதில் உள்ள வரம்பு என்னவென்றால், சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரருக்கு வாகனம் இருக்க வேண்டும் என்பதுடன், அந்த வாகனம் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவரின் பாதுகாப்புக்கு மட்டுமின்றி, வீதிகளில் செல்லும் பிற வாகனங்கள், அதில் பயணம் செய்பவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த வழிகாட்டுதல்களில் இருந்து அந்த கட்டுப்பாடுகளை நீக்குவது கருத்தியல் முடிவு அல்ல. மருத்துவர்கள் அதைச் சிறப்பாக அடையாளம் காண முடியும். எனவே, அத்தகைய மாற்றங்களைச் செய்வதற்கு முன், குறைந்தபட்சம் இது பற்றி நிபுணர்களிடம் கேட்டிருக்க வேண்டும்.

இதற்கிடையில், ஒரு கண்ணில் பூஜ்ஜிய தூரம் பார்வை இல்லாதவர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட அனுமதி இல்லை என்ற வரம்பும் நீக்கப்பட்டுள்ளது. தற்போதைய வீதி விபத்து மரணங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மோட்டார் சைக்கிள்களே காரணம் என்பதால், அதற்கான வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு, கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கம் மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் என்பன இந்த புதிய வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில், இந்நாட்டில் அதிகரித்து வரும் உயிரிழக்கும் வீதி விபத்துக்கள் நாட்டில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்குக் குறைக்கப்பட்டால், அத்தகைய கட்டுப்பாடுகளை நீக்குவதில் சில நியாயங்கள் உள்ளன. ஆனால் இதயத்தை உடைக்கும் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் பொதுவானதாக இருக்கும் போது வழிகாட்டுதல்களில் இத்தகைய மாற்றத்திற்குச் செல்ல இது நேரம் இல்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தவறுகளை நியாயப்படுத்தும் அரசியல்

**மொஹமட் பாதுஷா**

ஒவ்வொரு தரப்பினரும் தாங்கள் செய்கின்ற நல்ல, கெட்ட காரியங்கள் தொடர்பில் தம் பக்க நியாயங்களை வைத்திருப்பார்கள். ஆயுதக் குழுக்கள், பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், கள்வர்கள், கொலைகாரர்கள், அரசியல்வாதிகள், தொடக்கம். பெரும் தலைவர்கள் வரை எல்லோருக்கும் இது பொருந்தும்.

ஆனால், அநேகமான தரப்பினர் தம் பக்கமுள்ள நியாயங்களை அவர்களாகக் கூறுவதில்லை. அவர்களை நோக்கி கேள்விகள் முன்வைக்கப்படும்போது, மட்டுமே வெளிப்படுத்துகின்றனர். இருப்பினும், அரசியல்வாதிகள் இதற்கு விதிவிலக்கு எனலாம் அவர்கள் தமது செயல்களுக்கான நியாயப்படுத்தல்களை, காரணங்களைக் கற்பிதங்களைத் தாமாகவே முன் வந்து வெளியிடுவார்கள்.

அது அவர்களுக்கு ஒரு சுய திருப்தியைக் கொடுக்கும். இருப்பினும், அவர்கள் அப்படிச் செய்கின்றார்கள் என்பதற்காக அவையெல்லாம் உண்மையென்றோ நியாயம் என்றோ ஆகிவிட மாட்டாது. இவ்வாறு கூறுவதால், அவர்களது நடவடிக்கைகளால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதகமான விளைவுகளுக்குப் பிராயச்சித்தம் கண்டதாகவும் ஆகிவிடாது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அண்மையில் புத்தகம் ஒன்றை ஆங்கில மொழியில் வெளியிட்டிருக்கின்றார். சமூக வலைத்தளங்களில் இது பற்றிய பலவிதமான கருத்துக்களே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டவுடன், அவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதும், சிறையிலோ அல்லது ஓய்வு நிலையிலோ இருக்கின்றபோது, சரித்திரம் எழுதிறதுவும் உலக வழக்கம் என்பதை நாம் மறக்க முடியாது. அந்த வகையிலேயே கோட்டாவின் புத்தகத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

'நான் ஜனாதிபதிப் பதவியைப் பறிகொடுப்பதற்கான காரணம்', 'எனது ஆட்சி; கவிழ்க்கப்பட்டதன் பின்னணி', 'எனக்கெதிரான மக்கள் கிளர்ச்சிக்கான அடிப்படைகள்' என்று ஏதாவது ஒரு தலைப்பை அவர் இந்த நூலுக்கு இட்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், தனது நியாயங்களுக்கு அப்பால் மக்களின் பக்கமுள்ள நியாயங்களையும் களநிலை யதார்த்தங்களையும் அவர் புரிந்துள்ளார் என்ற பிம்பத்தை இது ஏற்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது.

ஆனால் அவர், 'என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கான சதி' என்று இந்த நூலுக்குத் தலைப்பிட்டுள்ளதன் மூலம், குழூஉக்குறியாக ஒரு விடயத்தைச் சொல்லியிருக்கின்றார் எனலாம்.

அதாவது, ஒரு சதி மூலம் தான் தனது பதவி பறிக்கப்பட்டது என்பதைச் சொல்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். அப்படி என்றால், இதற்கப்பால் தனது ஆட்சியில் ஏற்பட்ட குழப்பங்கள், ஊழல்கள், மோசடிகள், வீழ்ச்சிகள், இனவாதம், நெருக்கடிகள் போன்றவை இது விடயத்தில் எந்தச் செல்வாக்கையும் செலுத்தவில்லை என்று அவர் நியாயப்படுத்த முனைகின்றாரா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

அப்படி அவர் முற்படுகின்றார் என்ற அனுமானம் உண்மையாயின், தனது ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு உண்மையிலேயே அடிப்படைக் காரணம் என்ன என்பதை இதுவரையும் நூலாசிரியர் விளங்கிக் கொள்ளவில்லை என்றோ அல்லது அதனை நன்கு அறிந்திருந்தும் அதனை மூடி மறைத்து ஒரு கதையைச் சொல்ல முற்பட்டிருக்கின்றார் என்றுமே கருத வேண்டியுள்ளது.

இந்த இரண்டாவது கருதுகோளும் உண்மையாக இருக்கும் பட்சத்தில், வழக்கமான ஆட்சியாளர்களைப் போலத் தனது தவறுகளை நியாயப்படுத்திலிட்டு, வேறு ஒரு தரப்பின் மீது பழியைப் போடும் ஒரு முயற்சியாகவே இதனை அரசியல் நோக்கர்கள் வகைப்படுத்துவார்கள்.

இதன்மூலம், தனக்கு ஒரு அனுதாபத்தையும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு அடுத்தடுத்த தேர்தல்களில் ஆதரவையும் தேட கோட்டபாய முயன்று பார்த்திருக்கின்றார் என்றும் கருத இடமுள்ளது.

இந்த நூலில் குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்கள் பற்றி கோட்டபாய எழுதியுள்ள வசனங்கள் கவனிப்பைப் பெற்றுள்ளது. 'தான் தொடர்ந்து ஆட்சியதிகாரத்தில் இருந்தால் சிறுபான்மையினருக்குப் பாதகமாக அமையக்கூடியதாக சிங்கள பௌத்தர்கள் பலம் பெறுவார்கள் என்ற அச்சத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் அரகலயவில் இணைந்து கொண்டார்கள்' என இதில் குறிப்பிட்டுள்ளார். இது கவனிக்கப்பட வேண்டியது.

இவ்வாறு கூறுவதன் மூலம் தமிழர்களும் முஸ்லிம்களும் இதில் கூடிய பங்கு வகித்திருக்கின்றார்கள் என்பதையும் சிங்கள பௌத்தம் பலப்படுவதை அவர்கள் விரும்பவில்லை என்றும் உட்கிடையாக அவர் சொல்லியுள்ளதாகக் கருதலாம். இதன் ஊடாக சிங்கள பெரும்பான்மைச் சமூகத்திற்கும் சிறுபான்மையினருக்கும் இடையில் இனப் பாகுபாட்டுச் சிந்தனையை மீண்டும் உசுப்பேற்றி விட்டு, சிங்கள மக்களின் காவலனாகத் தன்னை மீள நிலைநிறுத்த முற்பட்டிருக்கின்றார் எனலாம்.

பெருந்தேசிய ஆட்சியாளர்களும் கணிசமான அரசியல்வாதிகளும் சிறுபான்மைச் சமூகங்களை தமது அரசியலுக்காக எவ்வாறு பகடைக்காயாக அடையாளப்படுத்துகின்றார்கள் என்பதற்கும் சிங்கள மக்களிடையே எவ்விதம் காட்சிப் படுத்துகின்றார்கள் என்பதற்கும் மிகப் பிந்திய ஒரு உதாரணமாக இதனைக் கொள்ளலாம்.

முழுப்பூசணிக்காயை ஒரு பீங்கான் சோற்றில் மறைப்பது போல ஏனைய சிங்கள தலைவர்களின் வழியில் கோட்டபாயவும் நடந்த உண்மைகள், களநிலை யதார்த்தங்கள் யாவற்றையும் தனக்குச் சாதகமான ஒரு கண்ணாடியை அணிந்துகொண்டு நோக்கியிருக்கின்றார். அதனை மக்களையும் நம்ப வைக்க ஆசைப்பட்டிருக்கின்றார்.

தனது ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டுச் சக்திகள் இருந்தன என்று கோட்டபாய கூறியுள்ளார். இது முற்றாகப் புறக்கணிக்கப்பட முடியாதது. ஏனெனில், இலங்கையில் நடந்த, நடக்கின்ற எல்லா பெரிய சம்பவங்களுக்கும் பின்னால் ஒரு வெளிநாட்டுப் பின்புலம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சி பீடமேற்றியதிலும், 2015 தேர்தலில் மைத்திரிபாலவை ஆட்சிக்குக் கொண்டு வந்ததன் பின்னணியிலும், ஏன் 2019 – 2020 இல் கோட்டபாய ஆட்சியை நிறுவியதிலும் பல வெளிநாடுகளின் செல்வாக்கு இருந்திருக்கின்றது என்பது நாடறிந்த ரகசியம்தான்.

ஏன், ஆட்சி மாற்றத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இனவாத தாக்குதல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விட அரகலய ஒரு பெரிய நாசகார சதித்திட்டம் என்று யாராவது கூற முடியுமா?

இப்படி ஒவ்வொரு ஆட்சியை நிறுவுவதிலும் முக்கிய 'சம்பவங்களை' நிகழ்த்துவதிலும் வெளிநாட்டு சக்திகள் பங்கேற்றிருக்கின்றன. கோட்டாவை ஆட்சிக்கு கொண்டுவர ஏதாவது ஒரு வெளிநாட்டு சக்தி உதவியிருக்குமென்றால் அப்போது அவருக்கு எதிராக போட்டியிட்ட சஜித் பிரேமதாச இதனை 'சதி' என்றுதான் கருதுவார்.

மீண்டும் அதே சக்தி அல்லது வேறு ஒரு சக்தியானது கோட்டாவை பதவியிறக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அது அவரைப் பொறுத்தமட்டில் சதியாகத் தோன்றினாலும் மற்றைய தரப்பிற்கு அது ஒரு ஒத்துழைப்பாகவே தோன்றியிருக்கும். இதுதான் யதார்த்தம்.

மக்களுக்கு எதிராக அரசியல், சதிகளை எல்லாம் நடத்திவிட்டு, மக்களையும் நாட்டையும் அதள பாதாளத்தில் தள்ளிவிட்டு அதற்காக ஒரு துளிகூட இன்று வரையும் மனம்வருந்தாமல், உண்மையான காரணங்களைப் பற்றிப் பேசாமல் வெறுமனே மக்களுக்குக் கதை சொல்வதிலுள்ள அரசியல் மக்களுக்குப் புரியாமல் இல்லை. இதனை 'கதையளத்தல்' அல்லது 'கதைவிடுதல்' எனக் கூறுவார்கள்.

கோட்டபாய ராஜபக்ஷ தனது கருத்தைச் சொல்வதற்கான உரிமை அவருக்குள்ளது. அதன்படி அந்தப் புத்தகத்தில் உள்ள எல்லாம் முற்றாகச் சோடிக்கப்பட்டவை என்று கூறுவதற்கில்லை. நமக்குத் தெரியாத பல விடயங்களும் அதில் உள்ளதாகவே தெரிகின்றது.

ஆயினும், அதுவல்ல இங்குள்ள பிரச்சினை.. அரகலய போராட்டம் மற்றும் ஆட்சிக் கவிழப் பின் அடிப்படை காரணங்கள் பற்றிய பிழையான கற்பிதங்களை, காரணங்களை பிம்பம்படுத்த இதனூடாக முயற்சிக்கப்பட்டுள்ளதாகவே அவதானிகள் கூறுகின்றனர். இப் புத்தகத்தில் உள்ள ஒரு சில பந்திகள் அதற்கு பதச்சோறாக முன்வைக்கப்படுகின்றன.

இந்த நாட்டில் அரகலய என்ற மக்கள் எழுச்சி தோற்றம் பெற்றதற்கு அடிப்படைக் காரணம் கோட்டபாய தலைமையிலான ராஜபக்ஷக்களின் ஆட்சியாகும். இனவாதம், பொருளாதார நெருக்கடி, மக்களை மறந்த எகத்தாளமான அரசியல், தலைக்கனமான ஆட்சி எனப் பலவிதமான நெருக்கடிகள் ஏற்பட்ட பிறகே மக்கள் வீதிக்கு வந்தனர்.

சிங்கள மக்கள் ஏற்கெனவே மஹிந்த ராஜபக்ஷவை இரண்டு தடவை 10 வருடங்கள் ஆட்சியில் அமர்த்தினார்கள். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாவுக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. இவற்றுள் 95 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் சிங்கள மக்களின் வாக்குகளாகும். அதுபோலவே 2020 பொதுத் தேர்தலிலும் சிங்கள மக்கள் மொட்டுக் கட்சியை ஆட்சி பீடமேற்றினார்கள்.

இந்;த சிங்கள மக்கள்தான் முதலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வீதியில் இறங்கினர். பிறகு சிறுபான்மையினரும் இணைந்து கொண்டனர். அனைத்து இலங்கையருக்குமான ஒரு போராட்டமாக இது மாறியது. கோட்டபாய கூறுவது போல இனம், மதம் என்ற பாகுபாடுகள் இதில் இருக்கவில்லை.

அதேநேரம், இந்த சந்தர்ப்பத்தை உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கும் என்பதை அவர் புதிதாகக் கூற வேண்டியதில்லை. அது அப்போதே அனுமானிக்கப்பட்ட சங்கதிதான். ஆனால், மக்கள் வெறுப்படைய அடிப்படைக் காரணம் ராஜபக்ஷக்களின் ஆட்சிமுறைதான் என்பதை மறுக்க முடியாது.

இருப்பினும், ஏதோ அடிப்படையில் தாம் விட்ட தவறுகளுக்காக கோட்டபாய உள்ளிட்ட ராஜபக்ஷக்கள் மக்களிடம் மனம் வருந்தவில்லை என்பதைத்தான் இந்த புத்தகம் குறிப்புணர்த்துகின்றது. கோட்டபாய மட்டுமல்ல, எந்த ஆட்சியாளரும் அரசியல்வாதியும் ஒருபோதும் தமது தவறுகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதே கசப்பான யதார்த்தமாகும். இதனை மக்கள் புரிந்துகொண்டால். சரி.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள். கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும். மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கசிப்பினை கட்டுப்படுத்துங்கள்




முல்லைத்தீவு - சுதந்திரபுரம் கிராமத்தில் கசிப்பு விற்பனை அதிகரித்துக் காணப்படுவதன் காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தின் பாடசாலை சூழலில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதன் காரணமாக மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்படுகிறது.

மேலும், கசிப்பு விற்கப்படும் இடங்கள் தொடர்பாக பொது மக்களினால் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் பொலிஸார் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனவும் இதன் காரணமாகவே கசிப்பு விற்பனையில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளதாகவும் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் சுதந்திரபுர பகுதியில் கசிப்பினை கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– நடராசா கிருஸ்ணகுமார்

# உலகமயமாதலின் உண்மை



மரியசெல்வம் ஜோய் எந்தனி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




**இன்றைய நவீன உலகத்தில் கடின உழைப்பை யாரும் விரும்புவதில்லை. உலகமயமாக்கல் என்பதன் உண்மையான அர்த்தம் மருவி மரபுகளையும் பாரம்பரியங்களையும் பின்பற்றாமல் இருப்பதே உலகமயமாதல் எனும் புதிய அர்த்தத்தில் போய்க்கொண்டிருக்கிறது. சுருக்கமான சொல்வதாயின் "NO HARD WORK ONLY SMART WORK" என்று ஆகிவிட்டது.**

இன்றைய தலைமுறைகள் இணையம் இன்றி எவரும் உயிர் வாழ முடியாது என்று இயங்கிக் கொண்டிருக்கிறது. உணவு, உடை, உறையுள் இவற்றை விட இணையம் ஒரு படி மேலே சென்று விட்டது.

போஷாக்கான உணவுகளை உண்பது போய், போனில் (Phone) பார்க்கும் உணவுகளை உண்பது தான் நல்ல உணவு என்றாகிவிட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை இன்று அலைபேசிப் பாவனை அதிகமாகிவிட்டது. ட்ரெண்டிங் (Trending) எனும் பெயரில் உயிரைக் கூட பெரிதாக எண்ணாமல் மலை உச்சியில் இருந்து செல்பி (Selfie) எடுப்பது அதனை டிக் டாக்கில் (Tiktok) பதிவு செய்தல் இது மட்டும் தான் வாழ்க்கை என்று ஆகிவிட்டது.

மேலைத்தேயப் பொருளாதார உத்தி முறைகளைக் கையாளலாம், புதிய புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளலாம், இவற்றையெல்லாம் புறமொதுக்கி விட்டு இன்று பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் போதைப்பொருளே முதன்மை நிலை வகிக்கின்றது.

சரியான வழிகாட்டல் இல்லையா? வழிகாட்ட வேண்டியவர்களும் வழி தவறுகிறார்களா? என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. பாதுகாக்கப்பட வேண்டிய பாரம்பரியங்களையும் மரபுகளையும் அடுத்த தலைமுறைக்குத் தடயம் இன்றி அழித்துக்கொண்டு வருகின்றோம். நூலகத்தைக் கூட நொடியில் நாடும் அளவிற்கு வசதிகள் வந்து விட்டன. வீட்டிலேயே இருந்து கொண்டு சம்பாதிக்கும் வியாபாரங்களும் வந்துவிட்டன. ஒன்லைன் பிசினஸில் (Online bussines) அதிகப் பணம் செலுத்தி ஏமாந்தவர்கள் ஏராளம் காணப்படுகின்றனர்.

இதற்கான விழிப்புணர்வை யார் தரமுடியும். எங்குப் பார்த்தாலும் தற்கொலைகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் போதைப்பொருள்களின் பெரும்பான்மையுமே காணப்படுகின்றது. "இதுதானா உலகமயமாதலின் பிரதிபலன்" இன்று இணையவழிக் கல்விமுறை என்பதால் தொலைபேசி கட்டாயமாக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

அனைவரும் அனைத்தையுமே தொலைபேசியில் அறிந்து கொள்கிறார்கள். சக மனிதரோடு பழகவோ, தொடர்பாடலை மேற்கொள்ளவோ நேரமில்லை.

தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற மரபு போய் இன்று அனைவரும் தலைகுனிந்த வண்ணமே உள்ளனர். "தொலைபேசியில் மூழ்கி நிமிர்ந்து பார்க்க நேரமில்லை" "அருகில் இருப்பவனுடைய பெயர் தெரியாது. ஆனால், முகப்புத்தகத்தில் ஆயிரம் பேர் நண்பர்கள்" இது ஒரு மாயையான விடயம் என்பது கூட மறந்த நிலையில் மனிதன் இருக்கின்றான்.

பகுத்தறிவு என்பதைப் பயன்படுத்தாமலேயே நமது அறிவை மங்கவைப்பதற்கான வழிமுறைகள் தான் இது என தெரிய வரும் போது காலம் ஓடிவிடும். பல்கலையும் கற்றுத் தேர்ந்திட வேண்டும் என பல்கலைக்கழகம் வரும் மாணவர்களின் மூளையை முடக்கிவிடுகிறது இன்றைய இணையம். செட் சிபிடி (Chat GPT) என்ற ஒரு செயலி இன்று பல்கலைக்கழக மாணவர்களின் உலகமாகிவிட்டது.

சொந்தமாக யோசித்து எழுத வேண்டிய அவசியம் இல்லை, நூல்களைப் புரட்டித் தேட வேண்டிய தேவையில்லை, நமக்கு எந்த கேள்விக்கு விடை வேண்டுமோ அத்தனையும் அந்த செயலி மூலம் பெறமுடியும். கணினி, தொலைபேசி பாவிக்கத் தெரியாதவன் இன்று மனிதனாக மதிக்கப்படுவதில்லை. அதற்காகக் கணினி, தொலைபேசியே தெரியாமல் இருப்பது நன்றல்ல. உலகமாற்றங்கள் உலகமயமாகிக் கொண்டிருக்கும் விடயங்கள் நமக்கு வரமா? சாபமா?

இலங்கையைப் பொறுத்தவரை வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்கள் இன்றும் அதே நிலைமையில் வசிக்க வளர்ந்து வரும் பொருளாதார சமத்துவமின்மையைக் காரணமாகிறது. நம் நாட்டிற்கு வேறு நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு மட்டுமே செல்லக்கூடிய இடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

கொழும்பு இன்று முழுமையாக மாறிப் போய் உள்ளது. ஒரு பக்கம் சாதாரண மனிதன் ஒரு நாள் வாழ்க்கையைக் கொண்டு செல்வதே சவாலாக அமையும் போது இன்னொரு பக்கம் அடுக்குமாடி கட்டிடங்கள், புதிய புதிய கலாச்சாரங்கள் வளர்ந்து கொண்டு செல்கின்றது.

இதுதான் உலகமயமாதலா? கொழும்பில் காணப்படும் போர்ட்சிட்டி (port city) யாருக்கானது? இதைப் பற்றி எல்லாம் சிந்திக்க நேரமில்லாமல் இயந்திரமான உலகில் இயங்கிக் கொண்டிருக்கின்றோம்.

கடின உழைப்பை யாரும் விரும்புவதில்லை. கொரோனா காலத்தில் எல்லாம் தடைப்பட்ட ஒன்லைன் வியாபாரங்கள் களம் இறங்கியது.

பிரமிட் முறையிலான எந்த ஒரு வியாபாரமும் தடைப்பட்டது எனும் போது பல சமூக வலைத்தளங்களில் தனித்தனியாகத் தொடர்பாடலை மேற்கொண்டு வீட்டிலேயே இருந்து உழைக்கலாம். ஒரு நாளைக்கு இரண்டு நபர்களை இணைத்தால் போதும் என போலியான விடயங்களைப் பரப்பியதால் பணம் பறி கொடுத்தோர் அதிகம். மோசடிக்கான முக்கிய தளமாக இன்று சமூக வலைத்தளங்கள் மாறி உள்ளமையே கவலைக்குரிய விடயம். ஒன்லைனில் ஆடை வாங்குதல் (Online shoping), ஒன்லைன் சாப்பாடு (Online food), ஒன்லைன் படிப்பு (Online studies), ஒன்லைன் வேலை வாய்ப்பு (Online vacancy) என எல்லாமே ஒன்லைன் மையமாகிவிட்டது. அத்தோடு செயற்கை நுண்ணறிவு (Artificial intelligent) நம்மைப் பற்றி நாம் தெரிந்திருப்பதை விட நமது தொலைபேசி அதிகமாகத் தெரிந்திருக்கின்றது.

நமது மூளையை முழுமையாகப் படிக்கக்கூடிய சக்தி உருவாகிவிட்டது. தொலைபேசியில் நமக்கு விருப்பமான அனைத்தும் அதிகம் விரும்பி பார்க்கப்படுபவை மீண்டும் மீண்டும் வரும் எதையாவது ஒரு பொருள் வாங்க ஆசை என அருகில் இருப்பவரிடம் கூறிய பின் தொலைபேசியை எடுத்தால் அந்த பொருள் சம்பந்தப்பட்ட விளம்பரங்களைக் காணமுடியும். நாம் அதிக நேரம் தொலைபேசியில் ஈடுபட இது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது இதுதான் உலகமயமாதலா?

பெண்கள் அதிகமாக இன்று இணைய வன்முறைக்கு ஆளாகின்றார்கள். சில பெண்கள் தைரியமாக அதை வெளிப்படுத்தி அதிலிருந்து மீண்டு வருகிறார்கள். பலர் அதை மறைத்து தவறான முடிவுகளை எடுக்கக் காரணம் போதியளவு விழிப்புணர்வின்மை என்றே கூறலாம்.

விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தலைமுறையினர் தான் இவ்வாறான வன்முறைகளைச் செய்பவர்களாக மாறி வருகின்றனர். உதாரணமாக தற்போது பேசுபொருளாக்கப் போய்க்கொண்டிருக்கும் இந்தியாவில் சிறுமி துஷ்பிரயோக செயலை செய்தது, ஒரு இளம் வயது ஆண், காரணம் போதைப்பொருள்.

இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகம் உலாவி வருவது இவ் போதைப்பொருளே அதிகமான குற்றங்களுக்குக் காரணம், தேடிப் பார்த்தால் நிச்சயமாக இவ் போதைப்பொருள் தான் காணப்படுகின்றது. பாதுகாப்பாக இருக்க வேண்டிய இடமான பாடசாலையை நம்பி பெற்றோர்கள் அனுப்ப அச்சப்படுகின்றனர்.

இந்நிலைமைக்குக் காரணம் நமது சமூகத்தில் காணப்படும் ஒரு சிலரே. ஆனால் அதிலிருந்து வரும் பாதிப்பு பலரைத் தாக்குகின்றது. இவ்வாறு நாட்டில் சிறந்த ஒரு மனிதனை உருவாக்குவதற்கான முதல் படி பாடசாலை. இவ்வாறான விடயங்களில் ஈடுபடும் போது சமூகத்திற்கான ஒரு சிறந்த மனிதனை எவ்வாறு உருவாக்க முடியும்?

அதிகமாகச் சுற்றுச்சூழல் சீரழிவுக்குக் காரணம் அதிகரித்த உலகளாவிய வர்த்தகம், இயற்கை வளங்களில் அதிக நுகர்வுக்கு வழிவகுத்து இருக்கின்றது. அதிகரித்த மாசுபாடு மற்றும் விரைவான காலநிலை மாற்றத்திற்கு வழி வகுத்திருக்கின்றது.

ஏனெனில் நிறுவனங்கள் செலவுகளைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய நாமே அதனை அழிக்கின்றோம். செயற்கையான விடயங்களை நம்பி இயற்கையை மறந்து விட்டோம்.

நாட்டின் உலகமயமாதலை தீர்மானிப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சி, நல்ல கல்வி, சுகாதாரமான சூழல், வன்முறையற்ற சமூகம் போன்றவையாகும். இதை விடுத்து மேலைத்தேயக் கலாசாரங்களை பின்பற்றுவது நமது மரபுகளையும் பாரம்பரியங்களையும் மாற்றியமைத்து ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவது அல்ல.

# "உடையை கிழித்தெறிந்து ஓடவிட்டேன்"



நடிகை கிரண் ரதோட் சமீபத்தை பேட்டி ஒன்றில் தனது சினிமாவை குறித்தும் தனது காதல் குறித்தும் பல விடயங்களை பகிர்ந்து கொண்டார். அப்போது சினிமாவிலிருந்து விலக ஒருவரை பைத்தியக்காரத்தனமாக நான் காதலித்து வந்தேன். திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால், அந்த காதல் தோல்வியில் முடிந்து நடைமுடைந்து போனதால் தான் நான் சினிமாவில் ஆர்வத்தைச் செலுத்த முடியாமல் கவனத்தைச் செலுத்த முடியாமல் வெளியேறி வாய்ப்பை இழந்துவிட்டேன் என கூறியிருக்கிறார்.

நான் என் காதலனைச் சித்திரவதை செய்தேன். ஒருமுறை அவன் என் கன்னத்தில் அறைந்ததால் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்த சமயத்தில் எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை என்னை எப்படி அடிக்கலாம் என்று எண்ணம் என் மனதுக்குள் ஓடிக்கொண்டே இருந்தது. ஒருமுறை அவன் என்னைப் பார்க்க வேண்டும் என எனவும் நேரில் வருமாறு இரவில் அழைத்தான். அப்போது நான் சென்று அவனின் ஆடைகளைக் கிழித்து என்னை அடிக்க உனக்கு எவ்வளவு தைரியம் என்று கேட்டுக் கொந்தளித்தேன். மேலும் அவனை ஆடையில்லாமல் அங்கிருந்து ஓட விட்டதாக கிரண் ரதோட் கூறி அதிர வைத்துள்ளார்.

# சர்ச்சையில் விஜய் ஆண்டனி



'ரோமியோ' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரில் முதலிரவில் மது போத்தலுடன் மிருணாளினி இருப்பது பெரும் சர்ச்சையை கிளப்பியது.

தற்போது இந்த போஸ்டர் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

இதற்கு பதில் அளித்த விஜய் ஆண்டனி, "ஆண்கள் மட்டும் தான் குடிக்க வேண்டுமா? குடிப்பது என்பது தப்பு என்றால் இருவரும் செய்வதும் தப்புதான். அதை பெண்கள் செய்யக்கூடாது என குறிப்பிட்டு சொல்வது எந்த விதத்திலும் நியாயம் கிடையாது என கூறினார். அந்த காலத்தில் இயேசு மது அருந்தியது எல்லாம் வரலாறு சொல்லுகிறதே என சர்ச்சையாக பேசினார். அவரின் இந்த பதில் பெரும் விமர்சனத்திற்கும் சர்ச்சைக்கும் உள்ளானது.



# 'குட் நைட்'க்கு டும் டும் டும்

'முதல் நீ முடிவும் நீ' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கவனம் ஈர்த்த நடிகை மீதா ரகுநாத். அதன் பின்னர் 2023 ஆண்டு நடிகர் மணிகண்டனுடன் நடித்த 'குட் நைட்' திரைப்படம் மூலம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் ஈர்த்தார்.

இந்நிலையில், மீதா ரகுநாத்தின் திருமணம் சத்தமின்றி இரு வீட்டார், உறவினர்கள், நண்பர்கள் சூழ நடைபெற்று முடிந்ததாகத் தகவல் வெளியானது. அதனை உறுதிப்படுத்தும் விதமாகத் தனது இன்ஸ்டா பக்கத்தில் கணவருடன் இணைந்திருக்கும் திருமணப் புகைப்படங்களைப் பகிர்ந்து ரசிகர்களுக்கு மீதா சர்ப்ரைஸ் அளித்துள்ளார்.

# வெள்ளிவிழா

அஜித்- ஷாலினி முதன்முதலில் ஜோடியாக நடித்த படம் அமர்க்களம். இந்தப் பட ஷூட்டிங்கில் ஷாலினிக்கு அஜித் மீது காதல் உருவானது.

இதனையடுத்து, கடந்த 2000இல் பெற்றோர் சம்மதத்துடன் இருவரும் திருமணம் செய்துகொண்டனர்.

பின்னர் குடும்ப வாழ்க்கையில் கவனத்தை செலுத்தினார். இந்நிலையில், அஜித்- ஷாலினிக்கு திருமணமாகி 25 ஆண்டுகள் நிறைவை கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்வில், அவர்களுக்கு பிடித்த 'உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு' என்ற பாடல் ஒலிப்பது போன்ற வீடியோ காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.



# ஒரு விளம்பரத்துக்கு ரூ.5 கோடி

இந்தியாவின் பிரபல முன்னணி நடிகைகள் தாங்கள் நடிக்கும் படங்களை விட ஒரு சில நிமிடங்கள் மட்டுமே வந்து செல்லும் விளம்பர படங்களில் கோடிகளில் அதிக சம்பளம் பெறுகின்றனர்.

ஆனால் இந்திய சினிமாவின் அதிக சம்பளம் பெரும் நடிகையாக வலம் வருகிறார் நயன்தாரா.

சமீபத்தில் விளம்பரத்தில் நடிக்க ரூ.5 கோடி சம்பளமாக பெற்றுள்ளார்.

கிருஷ்ணகிரி

## மகளைக் கொன்று ஏரியில் வீசிய தந்தை

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியில் காதலைக் கைவிட மறுத்ததால் மகளை, பெற்றோரே அடித்துக்கொலை செய்து ஏரியில் வீசியதாகக் கூறப்படுகின்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை அடுத்த பட்டவரப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பிரகாஷ்- மீனாட்சி தம்பதியின் 16 வயதான மகளுக்கும், முத்தாலி கிராமத்தைச் சேர்ந்த சிவா என்ற இளைஞருக்கும் காதல் ஏற்பட்டுள்ளது.

சிவா என்ற இளைஞன் கடந்த 2022ஆம் ஆண்டு பாலியல் குற்றச்சாட்டின் பேரில், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறைக்குச் சென்று வந்துள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே சிவாவும் 16 வயது மகளும் காதலைத் தொடர்ந்துள்ளனர்.

இதனால் ஆத்திரத்திரமடைந்த தந்தை, தாய் மற்றும் பெரியம்மா ஆகியோர் அந்தப் பெண்ணை அடித்துக் கொலை செய்து சடலத்தை பாகளூர் ஏரியில் வீசிவிட்டு, “மகளைக் காணவில்லை” என்று பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் தீவிர விசாரணை மேற்கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட பொலிஸார், ஏரியில் மிதந்த சிறுமியின் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.



இலங்கைக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை பங்களாதேஷும், இரண்டாவது போட்டியை இலங்கையும் வென்ற நிலையில் சட்டோகிராமில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியை பங்களாதேஷ் வென்றமையைத் தொடர்ந்து 2-1 என்ற ரீதியில் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 235/10 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜனித் லியனகே ஆ.இ 101 (102), சரித் அசலங்க 37 (46), குசல் மெண்டிஸ் 29 (51) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 3/42, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/38, முஸ்தபிசூர் ரஹ்மான் 2/39, சௌமியா சர்கார் 1/10, ரிஷாட் ஹொஸைன் 1/51)

பங்களாதேஷ்: 131/5 (48.2 ஓவ.) (துடுப்பாட்டம்: தன்ஸிட் ஹஸன் 84 (81) ஓட்டங்கள். பந்துவீச்சு: லஹிரு குமார 4/38, வனிடு ஹசரங்க 1/21)

போட்டியின் நாயகன்: தன்ஸிட் ஹஸன்



தமிழ்நாடு

## மக்களைக் கவர்ந்திழுக்கும் விஜய் கட்சி உறுதிமொழி

நடிகர் விஜய் ஆரம்பித்திருக்கும் தமிழக வெற்றிக் கழகம் கட்சி அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடிய உறுதிமொழிகளை வழங்கி வருகிறது.

அதாவது, “நமது நாட்டின் விடுதலைக்காகவும், நமது மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் மண்ணில் இருந்து தீரத்துடன் போராடி உயிர் நீத்த எண்ணற்ற வீரர்களின் தியாகத்தை எப்போதும் போற்றுவேன். நமது அன்னைத் தமிழ் மொழியைக் காக்க உயிர்த்தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளின் இலக்கை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து பாடுபடுவேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், இறையாண்மை மீதும் நம்பிக்கை வைத்து, அனைவருடனும் ஒற்றுமை. சகோதரத்துவம், மதநல்லிணக்கம், சமத்துவம் ஆகியவற்றைப் பேணிக்காக்கின்ற பொறுப்புள்ள தனி மனிதனாகச் செயல்படுவேன்”

அவர் வைத்துள்ள உறுதிமொழிகள் இரசிகர்களை மட்டுமல்லாது, பிற கட்சியினரையும் கவர்ந்துள்ளன.




அவர் பேசியிருந்த காணொலியில், “சமத்துவக் கொள்கையைப் பின்பற்றி, வரப்போகும் சட்டமன்றத் தேர்தலை நோக்கி, என்னுடைய பயணத்தில் இணைந்து மக்கள் பணி செய்ய, நாங்கள் ஏற்கெனவே வெளியிட்ட கட்சியின் உறுதிமொழியைப் படியுங்கள். உங்களுக்குப் பிடித்திருந்தால், நீங்கள் விருப்பப்பட்டால் உறுப்பினராகச் சேருங்கள்" எனப் பேசி, தமிழக வெற்றிக் கழகத்தை இணையத்தில் வைரலாக்கி இருக்கிறார்.

2026ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலுக்கு இப்போதே தயாராகி வருகிறார் விஜய். இதற்காக, கட்சியைப் பலப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.



## எஃப்.ஏ கிண்ணத் தொடர்: லிவர்பூலை வென்று அரையிறுதியில் யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க (எஃப்.ஏ) சவால் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மன்செஸ்டர் யுனைட்டெட் தகுதி பெற்றுள்ளது.


தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லிவர்பூலுடனான காலிறுதிப் போட்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு யுனைட்டெட் தகுதி பெற்றுள்ளது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா இவ்விரண்டு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்த நிலையில், மேலதிக நேரத்தில் 4-3 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு யுனைட்டெட் தகுதி பெற்றது.

யுனைட்டெட் சார்பாக ஸ்கொட் மக்டொமினி, அந்தனி, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், அமட் டியல்லோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லிவர்பூல் சார்பாக அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், மொஹமட் சாலா, ஹார்வி எலியட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

சீனா

## வாலுடன் பிறந்த குழந்தை



சீனாவில் கடந்த வாரம் ஒரு பெண்ணுக்கு வாலுடன் ஆண்குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தையைக் கண்ட மருத்துவர்களும் செவிலியர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். அக்குழந்தைக்கு 10 செ.மீ (4 அங்குலம்) அளவிற்கு வால் இருக்கிறது.

மருத்துவர்கள் இந்த வாலை Tethered Spinal Cord என்று கூறுகின்றனர்.

அதாவது தண்டுவடத்தில் குறைபாடுடன் கூடிய நரம்பியல் கோளாறு. இதனால்தான் இந்த வால் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த வால் நரம்பு மண்டலத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால் அதனை நீக்க முடியாது என்றும், அதனை நீக்கினால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர். மிக அரியவகை நோயாக இது அறியப்படுகிறது.

ஆதலால் இக்குழந்தை வாலுடனேயே வளர வேண்டியுள்ளது. குழந்தை வளர வளர வாலும் வளருமா என்ற அச்சம் பெற்றோருக்கு எழுந்துள்ளது.

## ஸ்பானிய லா லிகாத் தொடர்: அத்லெட்டிகோவை வீழ்த்திய பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், அத்லெட்டிகோ மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அந்த அணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக ஜோவா பீலிக்ஸ், றொபேர்ட் லெவன்டோஸ்கி, பெர்மின் லொபெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, வில்லாறியலின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் வலென்சியா தோல்வியடைந்தது.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற செல்டா விகோவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் செவிய்யா தோல்வியடைந்தது.

அந்தவகையில் லா லிகா புள்ளிகள் தரவரிசையில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்றிட் உள்ளது. 64 புள்ளிகளுடன் பார்சிலோனா இரண்டாமிடத்தில் உள்ளதுடன், 62 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜிரோனாவும், 56 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோ கழகமும் காணப்படுகின்றன.

## “வடகொரியாவின் ஏவுகணை சோதனை அமைதி, பாதுகாப்பிற்கு மிரட்டல்”

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை மிரட்டும் வகையில், வடகொரியா, கிழக்கு கடற்கரையில் குறுகிய தூரம் சென்று தாக்கி அழிக்கும் இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தி திங்கட்கிழமை (18) காலை சோதனை நடத்தியதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

“வடகொரியா நடத்தும் ஏவுகணை சோதனையின்போது ஏவுகணைகள் கொரிய தீபகற்பத்திற்கும், ஜப்பான் கடல் பகுதிக்கும் இடையில் விழுகின்றன. இது அனைத்தும் ஜப்பான் பொருளாதார மண்டத்திற்கு வெளியில்தான் நடக்கிறது. இதனால் ஜப்பானுக்கு காயமோ, சேதமோ இல்லை” என பாராளுமன்றத்தில் அந்நாட்டுப் பிரதமர் ஃபுமியோ கிஷிடா (Fumio Kishida) தெரிவித்துள்ளார்.

ஆனால், வடகொரியாவின் தொடர் சோதனை நாட்டின அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு மிரட்டல் என அவர் கூறவில்லை. அதேவேளையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை மீறுவதாக கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

“திங்கட்கிழமை (18) காலை ஏராளமான ஏவுகணைகளை வடகொரியா பரிசோதனை செய்ததைக் கண்டறிந்துள்ளோம்” என தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. “இது கொரிய தீபகற்பத்தின் அமைதிக்கு மிரட்டல்” எனவும் தெரிவித்துள்ளது.

மணிக்கு 50 கி.மீட்டர் வேகத்தில் சென்று 300 முதல் 350 கி.மீட்டர் தூரம் வரையிலான இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை சோதனை செய்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

11 நாட்கள் கொண்ட அமெரிக்கா-தென்கொரியா கூட்டு இராணுவ பயிற்சி கடந்த வியாழக்கிழமை முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 19 மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.